அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

## தமிழ் - ஆண்டு 7

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

மாந்தர் போற்றிப் பேண வேண்டிய நற்பண்புகளில் முதன்மையானது சினங்காத்தல் பண்பாகும். திருவள்ளுவர் சினங்காத்தல் பண்பினைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்திக் கூறுகிறார். திருக்குறளில் வெகுளாமை என்ற அதிகாரத்தில் சினங்காத்தல் பண்பு பற்றிக் கூறப்படுகிறது. சினம் காத்தல் என்றால் கோவத்தை அடக்க வேண்டும் என்று பொருள்படும்.

தீயானது தீப்பிடித்த இடத்தை மட்டும் அழிப்பதில்லை. அதன் சுற்றுப்புறங்களையும் சேர்த்து அழித்துவிடும். அதேபோல சினமானது சினங்கொண்டவரை மட்டுமல்லாது, உற்றார் உறவினரையும் சேர்த்து அழித்துவிடும். சினம் ஒருவரின் முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் அழித்துவிடுகிறது. இவ்வாறு சினத்தால் ஏற்படும் தீமைகளைச் சுட்டிக்காட்டி எச்சரிக்கிறார் திருவள்ளுவர். எனவே, ஒவ்வொருவரும் சினம் காத்தல் பண்பைப் பேணிக்காத்தல் வேண்டும்.